செ.இ.எண் :- 257 நாள் :- 23.07.12

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

## அறிக்கை – 23.7.2012

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், தாளவாடி உள்வட்டம், கொங்ஹள்ளி கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு மல்லிகார்ஜுனா திருக்கோவிலில் **20.7.2012** அன்று சாமி தரிசனம் முடித்து விட்டு வீடு திரும்பிய பெரம்பலூர் மாவட்டம், ரங்கநாதபுரம் மேலத் தெருவைச் சேர்ந்த திரு.நடேசன் என்பவரின் மகன் திரு.செல்லமுத்து காட்டு யானையால் தாக்கப்பட்டு, சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காட்டு யானை தாக்கியதில் அகால மரணமடைந்த திரு.செல்லமுத்து அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத்துயரச் சம்பவத்தில் காலமான செல்லமுத்துவை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்திற்கு வனத் துறை மூலம் மூன்று லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

C:\Documents and Settings\cabnet room\Desktop\Rajan\Elephant death at Erode on 20.7.12.doc